**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

II ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## பகுதி I

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 290 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் |

### 2. வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் கணக்காண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 3. கணக்குகள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான ஒதுக்கீட்டுக் கணக்குகள் 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கணக்கு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| அமைச்சு | ஒதுக்கீட்டுத் தலைப்பு | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 139 | 2011 ஏப்ரல் 04 |

#### (ஆ) மொத்த நிதிஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்துக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 6,600,896,130 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 5,296,325,414 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 1,303,365,149 இற்கும் ரூபா 1,205,567 இற்கும் இடைப்பட்ட விச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 19.74% சதவீதத்திற்கும் 0.02% சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | தேறிய நிதி ஏற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 139 | கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கள் அபிவித்தி அமைச்சு | 535,649,800 | 5,811,191,330 | 528,865,844 | 4,514,610,137 | 6,783,956 | 1,296,581,193 |
| 290 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 216,330,000 | 37,725,000 | 215,838,776 | 37,010,657 | 491,224 | 714,343 |
| | மொத்தம் | 751,979,800 | 5,848,916,330 | 744,704,620 | 4,551,620,794 | 7,275,180 | 1,297,295,536 |

(இ) ஏனைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களிற்கு பின்வருமாறு ரூபா 2,884,334 கூட்டு மொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட அமைச்சு / திணைக்களம் | வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவு | சேமிப்பு (2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 1,057,500 | 1,057,500 | - |
| ஓய்வூதியத் திணைக்களம் | 878,884 | 878,884 | - |
| கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 400,000 | 400,000 | - |
| கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 350,000 | 220,032 | 129,968 |
| கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 197,950 | 197,950 | - |
| மொத்தம் | 2,884,334 | 2,754,366 | 129,968 |

## 3.2 வருமானக் கணக்குகள்

(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு 2010 ஆம் ஆண்டிற்கான ஒரு வருமானக் குறியீடு தொடர்பாகத் தயாரிக்கப்பட வேண்டிய வருமானக் கணக்குகளின் எண்ணிக்கை ஒன்றாக இருந்தது. 2011 மார்ச் 31 ஆந் திகதியளவில் அந்த வருமானக் கணக்கு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் 2010 ஆம் ஆண்டின் போது வருமானக் குறியீட்டிற்காக ரூபா 16 மில்லியன் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 17.16 மில்லியன் தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 107.2 சதவீதமான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்** | **வருமானக் குறியீடு** | **மதிப்பீடு செய்யப்பட்டவை** | **உள்ளபடியானவை** | **மிகையாகச் சேகரிக்கப்பட்டவை** | **சதவீதம்** |
|---|---|---|---|---|---|
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகம் | 10.03.07.06 | 16,000,000 | 17,164,508 | 1,164,508 | 7.2 |

**3.3 முற்பணக் கணக்குகள்**

**3.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் 2011 ஏப்ரல் 05 ஆந் திகதி மற்றும் 2011 மார்ச் 29 ஆந் திகதி ஆகிய திகதிகளில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) எல்லைகளைப் பின்பற்றுதல்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

## 3.4 கட்டு நிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### 3.4.1 கட்டு நிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டு நிதி கணக்குகளின் ரூபா 45,133,795 தொகையான வரவு மீதி காணப்பட்டதுடன் அம் மீதி 01 ஆண்டிற்கு குறைந்த காலப்பகுதிக்குரியதாகும்.

| அமைச்சு / திணைக்களம் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதி |
|---|---|
| | ரூபா |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 44,952,922 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 180,873 |

### 3.4.2 பொதுவைப்புக் கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளில் ரூபா 8,872,885 கூட்டு மொத்த தொகை காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | காலப் பகுப்பாய்வு | | | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| | | 1 ஆண்டிற்கு குறைய | 1 ஆண்டிற்கு மேல் 2 ஆண்டுகளுக்கு குறைய | 2 ஆண்டகளுக்கு மேல் 5 ஆண்டகளுக்கு குறைய | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 6000/0/0/15/51-1 | 2,161,711 | 4,062,264 | - | 6,223.975 |
| | 6000/0/0/3/570-1 | - | - | 2,123,900 | 2,123,900 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 6000/0/0/6/73 | 525,010 | - | - | 525,010 |

# II ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## ஒதுக்கீட்டுத் தலைப்பு 139 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மிளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 திசெம்பர் 16 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வைப்பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

(i) அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. என்பது தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| **பதிவேட்டின் வகை** | **உரிய பிரமாணம்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| சேதங்கள் பதிவேடு | நி.பி 110 | அமைச்சினால் பேணப்பட்டு வந்த சேதங்கள் பதிவேட்டில் எதுவித பதிவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிலையானசொத்துக்கள் பதிவேடு | திறைசேரி சுற்றுநிரூபம் 842 | வருடாந்தம் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் விற்றுத் தீர்த்தல்கள் பதியப்பட்டிருக்கவில்லை. |

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட செலவுகள் மற்றும் சேமிப்புக்களை திறைசேரியின் கணனி அச்சுப் பிரதியில் காட்டப்பட்ட செலவுகள் மற்றும் சேமிப்புக்களுடன் ஒப்பிடும் போது 11 செலவு விடயங்களின் செலவுகள் ரூபா 572,082,827 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் திறைசேரியினால் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்ட நிதி ஏற்பாட்டிற்குரிய பெறுமதி அச் செலவு விடயங்களுக்கு வரவு வைத்ததன் காரணமாக ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள செலவுகளை விட திறைசேரி கணனி அச்சுப் பிரதியில் செலவுகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) பாதீட்டு முரண்

(i) தலைப்பு 139 இன் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் 10 செலவு விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 212,760,000 தொகையான தேறிய எற்பாடு முழுவதும் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ii) 14 செலவு விடயங்களுக்காக மிகையாக நிதி ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 99% சதவீதத்திற்கும் இடைக்கப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(இ) கட்டு நிதிக் கணக்கு

(i) 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அமைச்சு தீர்த்து வைக்கப்பட்டிராத கட்டு நிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 44,952,923 இருந்ததுடன் அம் மீதிகள் 2010 ஆம் ஆண்டின் மேலான மீதியாகும்.

(ii) தீர்த்து வைக்கப்படாத கட்டு நிதி மீதியில் அமைச்சினால் வழங்கப்பட்டு தீர்த்துவைக்கப்படாத முற்பணங்கள் ரூபா 10,662,243 தொகையும் சுனாமியால் பாதிப்பிற்கு உள்ளாகிய பிரதேசங்களை புனர் நிர்மாணம் செய்தல் செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டு தீர்த்து வைக்கப்படாத ரூபா 23,432,038 தொகையுமாகும்.

(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்கள்

13901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்றுக்களில் 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் அறவீடு நிலுவையாக காணப்பட்ட மீதிகள் ரூபா 946,221 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பிண்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டு இருந்த காலம் |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனம் | 02 | 02 ஆண்டுகள் |
| (ii) | இயந்திரம் | 39 | - |

### (ஆ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

அமைச்சினால் சில சொத்துக்கள் முறையற்ற வகையில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| சொத்துக்களின் வகை | சொத்துக்கள் அலகுகளின் எண்ணிக்கை | சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | 03 | குருநாகல் பிரதான செயலாளர் | |
| | 10 | மீன் பிடி கூட்டுத்தாபனம் | 02 ஆண்டுகள் |
| | 03 | சீனோர் மன்றம் | |
| | 02 | கடற்றொழில் மற்றும் நிரியல் வளங்கள் திணைக்களம் | |

(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமின்றி அமைச்சின் பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **சொத்துக்களின் வகை** | **சொத்துக்களிற்குச் சொந்தமான நிறுவனம்** | **எண்ணிக்கை அலகுகள் அல்லது அளவுகள்** | **காலப் பகுதி** |
|---|---|---|---|
| மோட்டார் வாகனம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 03 | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் முதல் |

(ஈ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு குறைவான காலப்பகுதியாகக் காணப்பட்டு வருகின்ற தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 7,900,197 ஆக இருந்தது.

## 1.5 இணக்கமின்மைகள்

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (i) | **தாபன விதிக்கோவை** | | |
| | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 மற்றும் 4.2 ஆம் பிரிவுகள் | 225,769 | ஓய்வு பெறுவதற்கு நிர்ணயித்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து கடன்களை அறவிடுவதற்கு ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை |
| (ii) | **நிதிப்பிரமாணம்** | | |
| | நி.பி 104 | - | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடக்க பரிசோதனை அறிக்கையும் முழுமையான அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | நி.பி 1645 | - | அனைத்து வாகனங்களுக்குமாக பொது 267 படிவம் இனைப் பூரணப்படுத்தி பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | **ஏனைய சுற்று நிரூப அறிவுறுத்தல்கள்** | | |
| | சனாதிபதி செயலகத்தின் சுற்று நிரூபம் | | |
| | சீஎஸ்ஏ/பீஜ/40 ஆம் இலக்கம் 2006 சனவரி 04 ஆந் திகதி | - | அமைச்சருக்கு 02 வாகனங்களும் அவரின் பதவியணியினருக்கு 05 வாகனங்களும் பிரதி அமைச்சருக்கு 02 வாகனங்களும் அவரின் பதவியணியினருக்கு 03 வாகனங்களும் பயன்படுத்துவதற்கு தகைமை பெற்றுள்ள அதே வேளை அமைச்சின் அமைச்சரினால் 07 வாகனங்களும் பதவியணியினரால் 09 வாகனங்களும் |

| | | |
|---|---|---|
| | | பிரதி அமைச்சரினால் 04 வாகனங்களும் அவரின் பதவியணியினரால் 03 வாகனங்களும் ஆக சுற்றுநிரூபத்திற்கு முரணாக 11 வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. |

**(iv) தேசிய பாதீட்டுச் சுற்றுநிரூபம்**

| | | |
|---|---|---|
| 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றுநிரூபம் | 153,526 | இடமாற்றம் பெற்றுச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டிருக்கும் நட்டங்கள் மற்றும் சேதங்கள் இடம் பெற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

ஒதுக்கீட்டுக் கணக்கின் நட்டங்கள் தொடர்பான கூற்றில் நிகழ்ச்சித் திட்டங்கள் இலக்கம் 01 மற்றும் 02 இன் கீழ் ரூபா 25,000 இற்கு குறைவாக அல்லது மிகையாக நட்டம் இடம் பெற்றிருக்கவில்லை எனக் காட்டப்பட்டிருந்தும் 2010 ஆம் ஆண்டில் 05 வாகனங்களுக்கு ரூபா 115,401 தொகையான சேதங்கள் ஏற்பட்டிருந்தன.

## 1.7 செயற்பாட்டுச் செயற்திறனின்மை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் சம்பந்தமான பொழிப்பு ஒன்று கீழே தரப்படுகின்றது.

(அ) கடற்றொழில் கூட்டுறவு பயிற்சி நிகழ்ச்சித்திட்ட ஏற்பாடுகளின் கீழ் கடற்றொழிலாளர்களின் வருமானத்தினை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றாக சுழற்சிக் கடன் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் மிளாய்வாண்டில் ரூபா 4,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 06 மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ரூபா 1,862,590 தொகையினை சுழற்சிக்கு உட்படுத்தாது வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கடற்றொழில் பிரிவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஹிக்கடுவ மற்றும் பாணந்துறை கடற்றொழில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தம் கம்பனி ஒன்றுடன் 1997 திசெம்பர் 07 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 8 சதவீத விற்பனைப் புரள்வு வரி கழித்து செலுத்தப்பட வேண்டிய போதிலும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி 12.5% ஆல் குறைத்து செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க கம்பனி தொடுத்த வழக்கின் பிரகாரம் பாணந்துறை மற்றும் ஹிக்கடுவை துறைமுகங்கள் தொடர்பாக முறையே மற்றும் ரூபா 4,783,457 மற்றும் ரூபா 10,315,440 தொகைகள் 9.25 சதவீத வட்டியுடன் செலுத்தப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க 08 ஆண்டு காலத்திற்காக ரூபா 11,159,159 தொகை கணிக்கப்பட்டிருந்தது. வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் அப்பணத்திணை செலுத்துதல் தாமதிக்கப்பட்தன் காரணமாக 2010 பெப்ரவரி 19 ஆந் திகதி ரூபா 26,258,032 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 1.8 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

அமைச்சிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்கு குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் உருவாகிய விடயங்கள் சம்பந்தமாக அரசாங்க கணக்கு குழுவினால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளை அதிகாரிகளினால் அமுல்படுத்துகையில் மெதுவான போக்கு காட்டப்பட்டிருந்தது.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் | அரசாங்க கணக்குகள் குழு கூட்டம் நடைபெற்ற திகதி | குழுவின் சிபார்சு |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| 2007 | 05 | மாதுகங்க மற்றும் நீர்கொழும்பு களப்பு செயற்திட்டத்தின் மீள் நிரப்பல் விண்ணப்பத்திற்கான கொடுப்பனவுகளை மறுத்தல் | 2010 ஒக்டோபர் 06 | ரூபா 73 மில்லியன் மிளளிப்பு விண்ணப்பத்திற்கான கொடுப்பனவுகளை நிராகரிப்பது சம்பந்தமான |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | விபரமான அறிக்கை இரண்டு வாரத்திற்குள் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தல் |
| | 08 | பல நாள் மற்றும் ஒரு நாள் படகு தயாரிப்பிற்கான மானியம் | 2010 ஒக்டோபர் 06 | நெதர்லாந்து உதவியின் கீழ் பல நாள் மற்றும் ஒரு நாள் படகுகளைத் தயாரிப்பதற்கான மானியத்தின் கீழ் திருப்பி அனுப்பிய யாழ்ப்பாண மாவட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டினை மீளப் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளையும் அதற்கான பதில்களையும் அறிவித்தல் |
| | 09 | திக்வோவிட துறைமுக நிர்மாண ஒப்பந்தம் | 2010 ஒக்தோபர் 06 | திக்வோவிட துறைமுக உடன்படிக்கையில் மாற்றம் செய்தலும் அது தொடர்பான இணக்கப்பாட்டினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தெரிவித்தலும் |
| | 11 | கடற்கரைப் பூங்காவினை நிர்மாணித்தல் | - மேற்படி - | சாத்திய வள ஆய்விற்காகச் செலவு செய்ததன் பின்னர் காலி தெற்கு கரையோரப் பூங்காவின் நிர்மாணத்தினை கைவிட்டமை சம்பந்தமாக அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பித்தல் |
| 2008 | 14 | பதவியினர் கடன் | - மேற்படி - | உத்தியோகத்தரிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | | அறவிட முடியாத கடனை பதிவழிக்கும் வாய்ப்பு தொடர்பாக திறைசேரியிடம் விசாரித்தல் |
| 18 | நட்டங்கள் பதிவேடு | - மேற்படி - | ரூபா 503,355 தொகையான நட்டங்களை ஏடுகளில் பதிவு செய்தலினையும் தற்போதைய நிலைமையினையும் அறிவித்தல் |
| 20 | ஐக்கிய நாடுகளின் மக்கள் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டம் | ஃ மேற்படி - | ஐக்கிய நாடுகளின் மக்கள் குடியிருப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒப்படைக்கப்பட்ட செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர் அறிக்கையினைச் சமர்ப்பித்தல் |

(ஆ) தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 02 தாய்ப்படகுகளைத் தயாரித்து கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தில் 98% அல்லது ரூபா 135,805,870 சேமிப்பாகக் காட்டப்பட்டிருந்தது. இத்தாய்ப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2007 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு ரூபா 300,000,000 தொகை ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு ஆயத்தப்படுத்தல் முற்பணமாக ரூபா 65,203,200 தொகையும் நாணயக் கடிதக் கட்டணமாக ரூபா 1,054,860 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2008 ஆம் ஆண்டில் ரூபா 42,200,000 தொகை பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் 2009 ஆம் ஆண்டின் போதும் ரூபா 450,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போதும் ரூபா 138,000,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் நாணயக் கடிதத்தின் காலத்தினை நீடிப்பதற்காக ரூபா 2,181,630 தொகை

செலுத்தப்பட்டிருந்தது. 2007 யூன் 26 ஆந் திகதி ரூபா 326,000,000 பெறுமதியான 02 தாய்ப்படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் முற்பணம் செலுத்தப்பட்டு 280 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரரினால் படகுகள் தயாரிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 2010 திசெம்பர் மாதம் இறுதி வரை படகுகளை அமைச்சு பெற்றுக்கொள்ளவில்லை.

(ii) திக்கோவிட மீன்பிடித் துறைமுகத்தினை நிர்மாணிப்பதன் காரணமாக வீடுகளை இழந்த குடும்பங்களுக்காக மத்திய தரமான 06 வீடுகளும் 14 மற்றும் 04 தொடர் வீடுகளாக 18 தொடர் வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட 14 தொடர் வீடுகளின் நடுப்பகுதியில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருப்பதனால் அந்த வீடுகளில் குடியிருந்தவர்களுக்கு வீட்டு வாடகையினைச் செலுத்துதல் பரிசோதனை அறிக்கை கட்டணம், வீடுகளை மேம்படுத்துதல் என்பவற்றிக்காக உயர் முகாமைத்துவத்தின் கவனயீனம் காரணமாக ரூபா 4,814,621 மேலதிகச் செலவு ஒன்றினை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

(iii) திக்கோவிட மீன்பிடிப்புத் துறை முகத்தினை நிர்மாணிப்பதன் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் தனியார் கம்பனி ஒன்றிக்கு ரூபா 31,398,691 இற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் திட்டத்திலுள்ள மாற்றத்தின் அடிப்படையில் ஒப்பந்த பெறுமதி ரூபா 32,956,834 ஆல் அதிகரித்திருந்ததுடன் அதற்கிணங்க முழுமையான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 64,355,525 ஆக இருந்தது. எனவே தொடக்க ஒப்பந்தப் பெறுமதி 105% ஆல் அதிகரித்திருந்தது. இந் நிலைமையின் அடிப்படையில் கொள்வனவுக் கையேட்டின் 8.13 ஆம் பிரிவின் பிரகாரம் முரண் 10% இனை மிகைக்கும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவுக் குழு ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணத்தைக் காட்டி அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திக்கோவிட துறைமுக நிர்மாணிப்பின் காரணமாக வீடுகளை இழந்தவர்களுக்கான வீடமைப்புச் செயற்திட்டம் நிர்மாணிக்கப்பட்ட காணியில் நீர் தேங்கும் பிரதேசத்தினை 52 பேச்சர்ஸ்களிலிருந்து 16.2 பேச்சர்ஸ்கள் வரை குறைப்பதற்காக காணியில் மண் நிரப்பும் போது அதிக கிரயம் ஏற்பட்டிருந்தது.

| | மண் நிரம்பிய அளவு | அலகுக்கான கிரயம் | மொத்த கிரயம் |
|---|---|---|---|
| பொறியியலாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் 52 பேச்சஸ்களைத் தவிர்த்து எஞ்சியவற்றை நிரப்புவதற்கு | 985 $m^3$ | 960 | 945,600 |
| புதிய உத்தேச நியமத்தின் பிரகாரம் 16.2 பேச்சஸ்களைத் தவிர்த்து எஞ்சியவற்றை நிரப்புவதற்கு | 14,225.85 $m^3$ | 1500 | 21,338,775 |

134 பேச்சர்ஸ்களை நிரப்புவதற்கான 985 $m^3$ பொறியியலாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் செய்யப்பட்டிருந்ததுடன் மேலதிக 36 பேச்சர்ஸ்களை நிரப்புவதற்காக மேலதிக 13,240.85 $m^3$ ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் அலகுக்கான கிரயம் ரூபா 960 இலிருந்து ரூபா 1500 வரை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 1.9 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் வெற்றிடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 20 | 13 | 07 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 07 | 05 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 81 | 69 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 51 | 02 | - |
| (v) | ஏனையவை (அமையம்) | - | 03 | - | - |
| | மொத்தம் | 161 | 141 | 23 | 01 |

(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் பற்றிய விபரம் கீழே தரப்படுகின்றது.

| | பதவியினர் வகை | பதவியினர் எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப் பகுதி |
|---|---|---|---|---|
| (i) | இரண்டாம் நிலை | 02 | * நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் பதவியினருக்குக்காக | 2005 திசெம்பர் 12 இலிருந்து எதிர் வரும் காலத்துக்கு |
| | | | * இபாட் செயற்திட்டம் | 2007 யூன் 01 – 2012 மே 31 |
| (ii) | ஆரம்ப நிலை | 02 | * கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 2007 யூலை 07 – 2010 யூலை 07 |
| | | | * கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 2010 யூலை 08 இலிருந்து எதிர் வரும் காலத்திற்கு |
| | | | * இபாட் செயற்திட்டம் | 2007 சனவரி 01 இலிருந்து எதிர் வரும் காலத்திற்கு |

(இ) முறையற்றவகையில் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் முறையற்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| மனித வளங்களின் எண்ணிக்கை | பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் | காலப் பகுதி |
|---|---|---|
| இரண்டாம் நிலை - 01 | இலங்கை கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் | 2005 ஏப்ரல் 07 ஆந் திகதியிலிருந்து எதிர் காலத்திற்கு |

## 1.10 உள்ளகக் கட்டுப்பாடு

(அ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவினை அமுல்ப்படுத்தல்

2000 மார்ச் 15 ஆந் திகதிய PFPE 07 ஆம் இலக்க மற்றும் 2001 சனவரி 25 ஆந் திகதிய 1AI / 2001/1 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்று நிரூபத்தின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு 2010 ஆம் ஆண்டிற்காக ஒரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தினை மாத்திரம் நடாத்தியிருந்தது.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 29 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வைப்பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இங்கே (அ) இலிருந்து (இ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

(அ) ஏடுகளையும் புத்தகங்களையும் பேணுதல்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் பின்வரும் ஏடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில ஏடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுச் செவ்வையில் அவதானிக்கப்பட்டது.

| ஏடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை வருடாந்தம் சமப்படுத்துதல், விற்றுத் தீர்த்தல்களைப் பதிவு செய்தல் என்பன இடம் பெற்றிக்கவில்லை. |
| நட்டங்கள் மற்றும் சேதங்கள் | நி.பி 110 | (i) நட்டங்கள் தொடர்பான கூற்றில் |

| | | |
|---|---|---|
| பதிவேடு | | காட்டப்பட்டுள்ள 20 சம்பவங்கள் தொடர்பாக ரூபா 1,557,001 தொகையினை அறவீடு செய்வதற்கு நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள 3 சந்தர்ப்பங்கள் தொடர்பாக ரூபா 558,681 தொகையான நட்டங்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| தீடீர் விபத்துக்கள் பதிவேடு | நி.பி 104 | வாகன விபத்துக்கள் திடீர் விபத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டிருக்காததுடன் விபத்துக்கள் சம்பந்தமாக விசாரணை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) வருமானக் கணக்குகள்

(i) வருமானங்களைச் சேகரிக்கும் பதிவேடுகளை மாதாந்த கணக்கு பொழிப்புக்களுடன் ஒப்பிடும் போது 04 மாதங்களுக்கான வருமானம் ரூபா 1,103,935 தொகையினால் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களில் குறைத்தும் 08 மாதங்களுக்கான வருமானம் ரூபா 812,476 தொகையினால் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது.

(ii) வருமானங்களை வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

29001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்களில் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 683,557

கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

## 2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்

திணைக்களத்தினால் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு குறைவான காலமாகக் காணப்பட்ட தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 3,186,132 ஆக இருந்தது.

## 2.5 இணக்கமின்மைகள்

### (அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுடன் இணக்கமற்ற சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| நிதிப்பிரமாணம் | |
| நி.பி 1645 | 32 வாகனங்களுக்கான சம்பவக் குறிப்பு புத்தங்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.6 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) திட்டமிடலும் செயலாற்றலும்

(i) திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| **உத்தரவுப்பத்திர வருமான வகுதிகள்** | **2010 இன் வருடாந்த இலக்கு** | **2010 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் முன்னேற்றம்** | **வேறுபாடு** |
|---|---|---|---|
| நன்னீர் மீன்பிடிப்புச் செயற்பாட்டு உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் | 3,300 | 1,918 | (1,382) |
| புதிய கடற்றொழில் படகுகளைப் பதிவுசெய்தல் | 500 | 3,292 | 2,792 |
| வருடாந்தம் பதிவுசெய்தல்களைப் புதுபித்தல் | 40,000 | 20,984 | (19,016) |
| செயற்பாட்டு உத்தரவுப் பதத்திரங்களை வழங்குதல் | 42,200 | 31,566 | (10,634) |

(ii) 2010 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டின் போது எதிர்பார்க்கப்பட்ட தொடக்கப் பதிவுசெய்தல் மேற்கொள்ளப்படுகின்ற கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை 500 ஆகக் காட்டப்பட்ட போதிலும் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தின் பதிவுசெய்தல் தொடர்பான பட்டோலையின் பிரகாரம் மற்றும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொடக்க பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்ட கடற்றொழில் படகுகளின் எண்ணிக்கை 3292 ஆகும். இதற்கிணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் முறையாக ஆய்வுசெய்யப்படாது தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.7 வங்கி கணக்கு செயற்பாடுகளிலுள்ள குறைபாடுகள்**

**செம்மையாக்கப்பட வேண்டிய மீதி**

2010 திசெம்பர் மாதத்திற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவுகளாக ரூபா 1,804,186 காட்டப்பட்டிருந்தது.

**2.8 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள் தொடர்பான பொழிப்பு ஒன்று கீழே தரப்படுகின்றது.

(i) ஒதுக்கீட்டுக் கணக்கின் நட்டங்கள் தொடர்பாகக் காட்டப்பட்டிருந்த வாகனம் ஒன்றின் நட்டம் தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் விசாரணைகள் மேற்கொள்ளப்படாது வாகனம் ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது.

(ii) நன்னீர் மீன்பிடி சங்கத்திற்கு வலைத் தொகுதியினை வழங்கும் போது அத் தொழில் ஈடுபட்டுள்ள பொருத்தமான நலன் பெறுனர்களைத் தெரிவு செய்து நலன்பெறுனர் முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கும் போது அதற்கிணங்க எண்ணிக்கையினைத் தீர்மானிக்காது திணைக்களத்தினால் 2010 ஏப்ரல் 01 ஆந் திகதி ரூபா 1,350,000 செலவு செய்து 1000 வலைத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. நன்னீர் மீன்பிடித் தொழில் நாட்டுக்கு உள்ளேயுள்ள பல மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கு மாத்திரம் பகிர்ந்தளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் வரை 580 வலைத் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.9 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 01 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 66 | 43 | 23 |
| (iii) | இரண்டாம் நிலை | 473 | 413 | 60 |
| (iv) | ஆரம்ப நிலை | 99 | 97 | 02 |
| | மொத்தம் | 643 | 554 | 89 |

## 2.10 உள்ளகக் கட்டுப்பாடு

**முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு**

2000 மார்ச் 15 ஆந் திகதிய PE/PE 07 ஆம் இலக்க மற்றும் 2001 சனவரி 25 ஆந் திகதிய IAI/2001/1 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றுநிருபத்தின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் 2010 ஆம் ஆண்டிற்காக ஒரு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழுக் கூட்டத்தினை மாத்திரம் நடாத்தியிருந்தது.